டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்

agridoctor.in | 23.08.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 054 - Madurai | Online Edition

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நிலக்கடலைக்கான விதைப்புக்கு முந்தைய விலை முன்னறிவிப்பு

கோயம்புத்தூர், ஆக.22

இந்தியாவில் நிலக்கடலை ஒரு முக்கியமான எண்ணெய் வித்துப் பயிராகும். உலகில் நிலக்கடலை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாகும். இப்பயிர் நாடு முழுவதும் பெரும்பாலும் மழையை நம்பியே பயிரிடப்படுகிறது. குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா, உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, மேற்கு வங்கம் மற்றும் தெலுங்கானா ஆகியவை இந்தியாவில் நிலக் கடலையின் முக்கிய உற்பத்தியாளர்களாகும்.

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின்படி, 2024-25 ஆம் ஆண்டில் இந்தியாவில் 57.62 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 119.42 லட்சம் டன் நிலக்கடலை உற்பத்தி செய்யப்பட்டு, ஒரு ஹெக்டேருக்கு 2073 கிலோ உற்பத்தித்திறன் எட்டப்பட்டுள்ளது. மேலும், 2025 முதல் 2026 வரை நிலக்கடலை சாகுபடிப் பரப்பு 3.17 சதவீதம் அதிகரித்து உள்ளது. இருப்பினும், சமீபத்திய பருவமழை ஏற்றத்தாழ்வுகள் காரணமாக வரத்து குறையக்கூடும் என்று வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாடு, இந்தியாவில் நிலக்கடலை உற்பத்தியில் முக்கிய மாநிலங்களில் ஒன்றாகும். இங்கு 2024-25 ஆம் ஆண்டில், 3.15 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில், ஒரு ஹெக்டேருக்கு 2439 கிலோ உற்பத்தித்திறனுடன் 7.69 லட்சம் டன்கள் நிலக்கடலை உற்பத்தி செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் நிலக்கடலை பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்கள் திருவண்ணாமலை, நாமக்கல், விழுப்புரம், சேலம், கடலூர் மற்றும்

அரியலூர் ஆகும். மாநிலம் முழுவதும் நிலக்கடலை எண்ணெய் சமையலுக்குப் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. அதன் உபபொருள் கால்நடைகளுக்கு அதிக புரதச்சத்து கொண்ட தீவனமாகப் பயன்படுத்தப்படுகிறது.

மேலும், இனிப்புப் பண்ட மாகவும் உட்கொள்ளப்படுகிறது. மாநிலத்தின் பல்வேறு மாவட் டங்களில், அந்தந்த மாவட்டாங் களின் மழைப்பொழிவு மற்றும் நீர் இருப்பைப் பொறுத்து ஆண்டு முழுவதும் இப்பயிர் விதைக்கப் படுகிறது. இருப்பினும், பெரும்பாலான மாவட்டங்களில் இது ஜூன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்கு இடையில் விதைக்கப்படுகிறது.

இந்தச் சூழலில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வுகளுக்கான மையத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவுப் பிரிவு கடந்த 25 ஆண்டுகளாக திண்டிவனம் மற்றும் சேவூர் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைகளில் நிலவிய நிலக்கடலை விலைகளைப் பகுப்பாய்வு செய்து, ஒரு சந்தைக் கணக் கெடுப்பையும் நடத்தியுள்ளது. காலத் தொடர் பகுப்பாய்வின்படி, அறுவடையின் போது நல்ல தரமான நிலக்கடலையின் விலை ரூ.65 முதல் ரூ.70 வரை இருக்கும் என்று தெரிகிறது. எனவே, விவசாயிகள் அதற்கேற்ப விதைப்பு முடிவை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சந்தைப்படுத்தல் தகவல் விவரங்களுக்கு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவுப் பிரிவு, வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003, தொலைபேசி : 0422-2431405, மின்னஞ்சல் முகவரி: tndemic@gmail.com தொடர்பு கொள்ளலாம்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, ஆக.22

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2026-27 ஆம் ஆண்டுக்கான நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை முறை பற்றிய பயிற்சி பெருந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் ச.கலைச்செல்வி தலைமை தாங்கி துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் பயிர் காப்பீட்டுத் திட்டம், வேளாண் கிடங்கில் இருப்பில் உள்ள உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டம் பெற விரும்பும் விவசாயிகள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் பற்றி சிறப்புரையாற்றினார்.

இப்பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலையம் சீனிவாசன், பேசுகையில் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். மேலும் உதவி தோட்டக் கலை அலுவலர் சுகுமார், தோட்டக்கலை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் நுண்ணீர் பாசன முறை குறித்தும் மற்றும் பி.எம் கிசான் திட்டம் பற்றிய விவரங்களை கூறினார். மேலும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் விசுவநாதன் மற்றும் தாமோதரன், அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். இப்பயிற்சியில் சீனாபுரம், தலையம்பாளையம் மற்றும் நிமிட்டிபாளையத்தை சார்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**20. சிக்கன் ஸ்வீட் கார்ன் சூப்**

**தேவையான பொருட்கள்**

சிக்கன் — 100 கிராம்

ஸ்வீட் கார்ன் — 1 கப்

சோள மாவு — 1 டீஸ்பூன்

மிளகு

உப்பு

**செய்முறை**

சிக்கன், கார்னை வேக வைத்து சோள மாவு கரைசல் சேர்த்து கெட்டியாகும் வரை சமைக்கவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# எஸ்.புதூர் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் சமச்சீர் உர பயன்பாடு பற்றிய விவசாயிகள் பயிற்சி



சிவகங்கை, ஆக.22

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரம், நெடுவயல் கிராமத்தில் சமச்சீர் உர பயன்பாடு மற்றும் பயன்பாட்டுத் திறன் பற்றிய பயிற்சி நடத்தபட்டது. வேளாண்மை அலுவலர் முன்னினை வகித்தார். சி.சேதுபதி, மண்ணியல் வல்லுநர் KVK – குன்றகுடி, பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயி களுக்கு சமச்சீர் உரம் பயன்படுத்தும் முறை பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் தொழில்நுட்பம் பற்றி விரிவாக எடுத்து கூறினார். நிலம் தேர்வு விதை தேர்வு பருவங்களுக்கு ஏற்ற இரகம் தேர்வு செய்தல் போன்ற தொழில்நுட்பம் பற்றி விரிவாக எடுத்து கூறினார். மற்றும் சமச்சீர் உர மேலாண்மை என்பது பயிரின் தேவை மண்ணின் வளம் மற்றும் தட்ப வெப்ப நிலை போன்ற வற்றிற்கு ஏற்ப தழைசத்து சாம்பல்சத்து மணிசத்து மற்றும் நுண்ணூட்ட சத்துக்களை சரியான விகிதம் சரியான நேரம் மற்றும் சரியான முறைகளில் பயன்படுத்தும் வழிமுறையாகும். மண் வளத்திற்கு ஏற்ப கரிம உரங்கள் உயிர் உரங்கள் இரசயன உரங்கள் போன்றவற்றை தேவைகேற்ப மற்றும் மண் பரிசோதனை முடிவுகள் மற்றும் மண் வள அட்டையின் பரிந்துரைகளின்படி பயன்படுத்த வேண்டும். இதனால் மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள் மேம்படும். அதன் மூலம் தரமான மற்றும் அதிக விளைச்சல் கிடைக்கும். தேவையற்ற உரங்களின் பயன் பாடுகள் தவிர்க்கபடுவதால் விவசாயிகளுக்கான செலவு குறையும். பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்கள் இடுவதன் மூலம் சுற்று சூழல் பாதிக்கபடாத வகையில் தழைசத்து மண்ணில் அதிகரிக் கலாம். அதன் மூலம் யூரியா மற்றும் அம்மோனியா சல்பேட் போன்ற தழைசத்து உரங்களின் பயன்பாட்டினை வெகுவாக குறைக்கலாம் என்பன போன்ற தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் – வேளாண் வணிகம் – ராதா பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தை படுத்துதல் மற்றும் விற்பனை முறை பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் பெ.ஸ்ரீரங்கசெல்வி பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் பயன்படுத்து வதால் மண்ணில் உள்ள தலை மணி மற்றும் சாம்பல் சத்துக்களை பயிர்கள் எளிதாக எடுத்து கொள்ளும் வகையில் மாற்றி தரப்படுகிறது.

மேலும் பயிர் வளர்ச்சியினை நிலைகளுக்கு எற்ப அடி உரம் தூர் கட்டும் பருவம் பூக்கும் பருவம் என பிரித்து உரங்களை இடுவதால் சத்துக்கள் வீணாவது என்பது வெகுவாக குறைக்கபட்டு விவசாயி களுக்கு நல்ல மகசூல் கிடைக்கும் வாய்ப்புள்ளது என விரிவாக எடுத்து கூறினார். மேலும் இப்பயிற்சியில் மண் மாதிரி சேகரித்தல் உயிர் உரங்கள் நெல் நுண்ணூட்டம் பாரம்பரிய நெல் ரகங்களின் விதைகள் இலைவண்ண அட்டை போன்ற பொருட்கள் கண்காட்சி–யாக விவசாயிகள் பார்வைக்கு வைக்கபட்டிருந்தது. உதவி தொழில் நுட்ப மேலாளர் ம.விஜய் ஆனந்த் பயிற்சிக்கு உண்டான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தார் மற்றும் பயிற்சியின் முடிவில் விவசாயிகளுக்கு நன்றியினை தெரிவித்தார்.



# விவசாயிகளுக்கு சமச்சீர் உரப் பயன்பாடு மற்றும் உரப் பயன்பாட்டுத்திறனை அதிகரித்தல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி



திருவள்ளூர், ஆக.22

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி வட்டாரம் வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் பூண்டி வட்டாரத்தில் உள்ள ராமதண்டலம் கிராமத்தை சார்ந்த 40 விவசாயிகளுக்கு சமச்சீர் உரப் பயன்பாடு மற்றும் உரப் பயன்பாட்டுத்திறனை அதிகரித்தல் என்ற தலைப்பின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கு வேளாண் அறிவியல் நிலைய முனைவர் தமிழ்செல்வி தலைமை தாங்கி பயிற்சியில் கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார்.

**மண் ஆரோக்கியத்தின் முக்கிய அம்சங்கள்**

சமச்சீரான உரப் பயன்பாடு என்பது, மண் பரிசோதனைகளின் அடிப்படையில் பேரூட்டச்சத்துக்களையும் நுண்ணூட்டச் சத்துக் களையும் சரியான அளவிலும் விகிதத்திலும் இடுவதாகும். உரப் பயன்பாட்டுத் திறன் (FUE) என்பது, இடப்பட்ட ஊட்டச்சத்துக்களில் எவ்வளவு பயிரால் உண்மையில் உறிஞ்சப்படுகிறது என்பதை அளவிடுகிறது. சமச்சீரான பயன்பாடு, எந்தவொரு ஊட்டச்சத்தும் விடுபடாமல் தாவர வளர்ச்சியைத் தடுக்காமலும் வீணாக்காமலும் இருப்பதை உறுதி செய்வதன் மூலம், உரப் பயன்பாட்டுத் திறனை நேரடியாக அதிகரிக்கிறது.

**சமச்சீரான உரப் பயன்பாடு**

**மண்பரிசோதனை :** யூகத்தின் அடிப்படையில் அல்லாமல், துல்லியமான உள்ளூர் மண் அறிக்கைகளின் அடிப்படையில் ஊட்டச்சத்துக்களை இடவும்.

**சரியான விகிதங்கள் :** நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் (NPK) மற்றும் துத்தநாகம் அல்லது போரான் போன்ற நுண்ணூட்டச் சத்துக்களை சரியான விகிதங்களில் வழங்குங்கள்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

**ஒருங்கிணைந்த பங்களிப்புகள் :** மண் உயிரினங்களைப் பாதுகாக்க, இரசாயன உரங்களுடன் இயற்கை உரங்கள் அல்லது உயிர் உரங்களைச் சேர்த்துப் பயன்படுத்தவும்.

**சரியான நேரத்தில் இடுதல் :** பயிரின் குறிப்பிட்ட வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்ற ஊட்டச்சத்துக்களை இடவும்.

**உரப் பயன்பாட்டுத் திறன் (FUE)**

**வரையறை :** இடப்பட்ட ஊட்டச்சத்துக்களில், தாவரம் எடுத்துக் கொண்டு பயன்படுத்திக்கொள்ளும் ஊட்டச்சத்துவின் சதவிகிதம்.

**இழப்புக் குறைப்பு :** குறைந்த FUE என்பது ஊட்டச்சத்துக்கள் நீர்நிலைகளுக்குள் அடித்துச் செல்லப்படுகின்றன அல்லது காற்றில் கலந்துவிடுகின்றன என்பதாகும்.

**குறிப்பிட்ட இடத்தில் இடுதல் :** உரங்களை மேற்பரப்பில் பரவலாகப் பரப்புவதற்குப் பதிலாக, வேர்ப் பகுதிக்கு அருகில் இடவும்.

**பிரித்துக் கொடுத்தல் :** நீர் மற்றும் பயிர் உறிஞ்சும் சுழற்சிகளுக்கு ஏற்றவாறு, நைட்ரஜனைப் பிரித்துக் கொடுக்கவும்.

மேலும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுனில்குமார், பேசுகையில் வேளாண்மை விரிவாக்க மையத்தில் விற்பனை செய்யப்படும் உயிர் உரங்கள் பற்றியும் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தபடும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். மண் மாதிரி எடுத்தல் மற்றும் மண் மாதிரியின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கி கூறினார்.

பசுந்தாள் உரப்பயிர், இயற்கை இடுபொருட்கள் பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம், அமிர்தக் கரைசல், மீன் அமினோ அமிலங்கள் மற்றும் பூச்சி விரட்டி தயாரித்தல் குறித்தும் விளக்கி கூறினார்.

இந்த பயிற்சியில் கலந்துக் கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் சிற்றுண்டி மற்றும் உணவு வழங்கப்பட்டது. வேளாண் கண்காட்சியாக உயிர் உரங்கள், நெல், நுன்னுட்ட கலவைகள், பார்வைக்கு வைக்கப்பட்டு அதன் முக்கியத்துவத்தினை பற்றியும் உயிர் உரத்தின் மூலம் விதை நேர்த்தி செய்தல் குறித்தும் உதவி தொழில்நுட்ப மேலாளர் எடுத்து கூறினார். மேலும் இந்த பயிற்சிக்கு கருத்துக்காட்சிக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பிட்டார் பிரான்ஸ் பாபு மற்றும் அழகுசெல்வன் செய்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# விவசாயிகளுக்கு மண் வள மேலாண்மை குறித்து பயிற்சி



திருவள்ளூர், ஆக.22

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் கடம்பத்தூர் வட்டாரத்தில் உள்ள மடத்துக்குப்பம் கிராமத்தை சார்ந்த 40 விவசாயிகளுக்கு மண் வள மேலாண்மை என்ற தலைப்பின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சிக்கு வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் வெங்கடேஸ்வரன் மற்றும் துணை வேளாண்மை அலுவலர் மா.ரமேஷ் தலைமை தாங்கி பயிற்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றி பேசினார் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் விற்பனை செய்யப்படும் உயிர் உரங்கள் பற்றியும் வேளாண்மைத் துறையில் செயல்படுத்த படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

இந்த பயிற்சிக்கு திரூர் குப்பம் வேளாண்மை அறிவியல் நிலையம் பேராசிரியர் வெங்கடேஸ்வரன் பேசுகையில் மண் வள மேலாண்மை என்பது பயிர் விளைச்சலைத் தக்கவைப்பதற்காக மண்ணின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்பு களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது.

தமிழ்நாட்டில், செம்மண் மற்றும் கருமண் வகைகள் அதிகமாக இருப்பதால், மண் தரம் குறைவதைத் தடுக்க ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, அங்கக உரங்கள் மற்றும் வழக்கமான மண் பரிசோதனைகள் தேவைப்படுகிறது.

**மண் ஆரோக்கியத்தின் முக்கிய அம்சங்கள்**

1. நல்ல மண் அமைப்பு மற்றும் தளர்வு (புளபொழப்பு தன்மை) காற்று மற்றும் நீர் ஓட்டத்தை அனுமதிக்கிறது.

2. சமச்சீர் ஊட்டச்சத்துக்கள், நச்சுத்தன்மை அல்லது கடுமை யான குறைபாடுகளைத் தடுக்கின்றது.

3. நுண்ணுயிரிகள் மற்றும் மண்புழுக்கள் தாவரங்களுக்கு உணவளிக்க கரிமப் பொருட்களை உடைக்கின்றது.

**பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள்கரிம உரங்களைப் பயன்படுத்தவும்**

1. பண்ணை உரம் (மாட்டு தொழு உரம்) மற்றும் பசுந்தாள் உரம் பயன்படுத்தவும்.


2.அறுவடைக் கழிவுகளை எரிப்பதைத் தவிர்க்கவும்; உர செலவுகளைச் சேமிக்க அவற்றை உரமாக மாற்றவும்.

3.குறிப்பிட்ட ஊட்டச்சத்து அளவுகளைச் சரிபார்க்க, மன்வள இணையதளம் மற்றும் மண் சுகாதார அட்டைகள் போன்ற திட்டங்களையும் பயன்படுத்தலாம்.

4.மண் நுண்ணுயிரிகளைப் பாதுகாக்க மற்றும் ஈரப்பதத்தைத் தக்கவைக்க கடினமாக உழுவதைக் குறைக்கலாம்.

பசுந்தாள் உரப்பயிர், இயற்கை இடுபொருட்கள் பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம், அமிர்தக்கரைசல், மீன்அமினோ அமிலங்கள் மற்றும் பூச்சி விரட்டி தயாரித்தல் குறித்தும் விளக்கி கூறினார். மேலும் உதவி தொழில்நுட்ப மேலாளர் வே.அன்பு, பேசுகையில் மண் மாதிரி எடுத்தல் மற்றும் மண் மாதிரியின் முக்கியத்துவம் குறித்தும் மற்றும் வேளாண் அடுக்ககத்தில் பதிவு செய்யாத விவசாயிகள் பதிவு செய்யவும் மேலும் உட்பிரிவுகளை இணைக் காத விவசாயிகள் உட்பிரிவுகளை இணைக்கவும் கேட்டுக் கொண்டார். இந்த பயிற்சியில் கலந்துக்கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் சிற்றுண்டி மற்றும் உணவு வழங்கப்பட்டது.

வேளாண் கண்காட்சியாக உயிர் உரங்கள், நெல், நுன்னுட்ட கலவைகள், பார்வைக்கு வைக்கப்பட்டு அதன் முக்கியத் துவத்தினை பற்றியும் உயிர் உரத்தின் மூலம் விதை நேர்த்தி செய்தல் குறித்தும் வெ.இளையராஜா உதவி தொழில்நுட்ப மேலாளர் எடுத்து கூறினார். மேலும் இந்த பயிற்சிக்கு கருத்துக்காட்சிக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஏற்பாடு செய்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நீல அவுரி- மூலிகை தாவரம்



கடந்த சில ஆண்டுகளாக நீல அவுரி செடியின் பசும் இலை மற்றும் உலர் இலைகளுக்கு சந்தை வாய்ப்பு அதிகரித்து வருகிறது. TEXTILE, HAIR DYE உள்ளிட்ட தொழில்கள் சார்ந்த நிறுவனங்களின் இயற்கை சாயத் தேவைக்கு இது பயன்படுகிறது. இதனுடைய அறிவியல் பெயர் ( INDIGO FERATINC-TORIA ) இது பேபேசி குடும்பத்தை சார்ந்தது. இதனுடைய ஆங்கில பெயர் ட்ரு இண்டிகோ (TRUE INDIGO). இது இறவை-யாகவும், மானாவாரியாகவும் பயிரிடலாம். இதற்கு அவுரி, நீலி, கருநீலி, இந்தியன் இண்டிகோ எனவும் பெயருண்டு.

### சாகுபடி முறை

அனைத்து பகுதிகளிலும் வளரக்கூடிய தாவரம், இது கரிசல் மற்றும் செம்மண்ணில் சிறப்பாக வளரும் ஈர களி மண்ணில் வளராது. விதையளவு ஏக்கருக்கு 10 கிலோ ஒரு கிலோ 390 முதல் 430 வரை விற்பனை செய்யப்படுகிறது. சில இடங்களில் ஒப்பந்த சாகுபடியாகவும் பயிரிடப்படுகிறது. அடியுரம் – ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் போட்டு நன்றாக புழுதி பட உழவு செய்ய வேண்டும். 10-20 நாள் வரை ஆடு மாடுகளால் செடிகளுக்கு பாதிப்பு ஏற்படலாம். அதற்கு பிறகு இலைகளில் கசப்பு தன்மை வருவதால் ஆடு, மாடுகள் இலையை தொடாது. மழைக்காலத்தில் மானாவாரியாக விதைக்கலாம். இறவையில் சாகுபடி செய்தால் 15 நாட்களுக்கு ஒரு முறை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பூச்சி/நோய் தாக்குதல் அவ்வளவாக தாக்காது.

### அறுவடை

விதைத்த 120வது நாளில் அறுவடை செய்யலாம். தரையிலிருந்து 10 செ.மீ உயரம் வரை விட்டு அதற்கு மேல்பகுதியை அறுவடை செய்து இலைகளை பிரித்தெடுக்கலாம். வேர்பகுதி மீண்டும் துளிர் விட்டு வளரத் தொடங்கும். இதை ஒரு மாதம் கழித்து இரண்டாவது அறுவடை செய்யலாம். இது போல 3-4 முறை இலைகளை பறிக்கலாம்.

**மகசூல் :** இறவையில் 5000 கிலோ பச்சை இலைகள் கிடைக்கும். அவற்றை வெயிலில் உலர்த்தினால் (ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு) காய்ந்து போன உலர்ந்த இலை அதாவது 1150 கிலோ முதல் 1650 கிலோ வரை கிடைக்கும். மானாவாரியில் 1500 முதல் 2000 கிலோ வரை பச்சை இலை கிடைக்கும்.

**விற்பனை? :** பச்சை இலைகளாக விற்பனை செய்யாமல் உலர்ந்த இலை களாக (DRY LEAF) விற்பனை செய்தால் கூடுதலான விலை கிடைக்கும். தற்போதைய சந்தை நிலவரப் படி 1 டன் பச்சை இலைகளுக்கு குறைந்த பட்சமாக 15000 முதல் 25000 வரை விலை கிடைக்கும். உலர்ந்த இலை டன் ஒன்றுக்கு 80 ஆயிரம் முதல் 1,20,000 வரை விற்பனை செய்யலாம். விலை யானது இலைகளின் தரம் மற்றும் சந்தையின் தேவையை பொருத்து நிர்ணயிக்கப்படும்.

விழுப்புரம், திண்டிவனம், தர்மபுரி, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் அவுரியை கொள்முதல் செய்ய வியாபாரிகள் நிறைய உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வறட்சியான இந்த எல்-நினோ கால கட்டத்தில் தரிசாக போடாமல் மழைக்காலத்தில் அவுரியை சாகுபடி செய்யலாமே.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# இளநீர் மற்றும் தென்னை சாகுபடி தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றது




திருப்பூர், ஆக.22

திருப்பூர் மாவட்டம், உடுமலையில் இளநீர் மற்றும் தென்னை சாகுபடி தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முனைவர் சுதாலட்சுமி ஆழியாறு அவர்கள் சிறப்புரையாற்றினார்.

தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் தங்கமணி, தென்னை மரங்களில் ஏற்படும் நோய்கள் மற்றும் அவற்றைத் தடுக்கும் வழிமுறைகள் குறித்து விளக்கிக் கூறினார்.

இளநீர் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் சீனிவாசன், தரமான இளநீர்க் காய்களின் உற்பத்தி மற்றும் தரம் குறித்து பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தனியார் தென்னை நிறுவன மேலாளர் கார்த்திகேயன் நன்றியுரையாற்றினார்.

# மக்காசோளம்-தரமான விதை-வளமான விவசாயம்

பெரம்பலூர், ஆக.22

மக்காசோளம் சாகுபடியில் பெரம்பலூர் மாவட்டம் மாநில அளவில் முதலிடம் வகிக்கிறது. நீர்த்தேவை குறைவு என்பதாலும், அதிக மகசூல் திறன் கொண்ட பயிர் என்பதாலும் தானியங்களின் அரசி என்று அழைக்கப்படுகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் ஆடிப்பட்டத்தில் மக்காசோளம் சாகுபடி அதிக அளவில் செய்யப்படும். கடந்த ஆண்டு பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காசோளம் சுமாராக 78,571 ஹெக்டேர் பரப்பில், அதாவது 6,300 ஹெக்டேர் (ஆறாயிரத்து முன்னூறு) இறவை-யிலும், 72,271 (எழுத்திரண்டாயிரத்து இருநூற்று எழுபத்து ஒன்று) ஹெக்டேர் மானாவாரியிலும் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. தரமான மக்கசோளம் விதைகளை பயன்படுத்தினால் விவசாயிகள் அதிக விளைச்சலும், கூடுதல் வருமானமும் பெறலாம். மக்கா சோளம் விதையின் முளைப்புதிறன் 90 சதவீதத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும். விதைகள் நன்கு திரட்சியாகவும் பதர் மற்றும் கிருமிகள் அற்று இருத்தல் அவசியம். மக்காசோளம் விதையின் குறைந்தபட்ச ஈரப்பதம் 12 சதவீதமாகவும் இருக்க வேண்டும்.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை நிலையமானது பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் மாவட்ட மைய நூலகம் மேற்கு பகுதியில் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையத்தில் விதையின் தரம் அறிய தர நிர்ணய காரணிகளான முளைப்பு திறன், புறத்தூய்மை, ஈரப்பத மற்றும் பிற இரககலப்பு ஆகியவை ஆய்வு செய்யப்படுகின்றன.

நடப்பாண்டிற்கு (2026-2027) 2,862 விதை மாதிரிகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பரிசோதனைக்கு இதுவரை 1,152 மாதிரிகள் உட்படுத்தப்பட்டு, அவற்றில் 47 விதை மாதிரிகள் தரமற்றவை என கண்டறியப்பட்டுள்ளன. ஒரு மக்காசோளம் பணி விதை மாதரிக்கு ரூ.80/- பரிசோதனை கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபர சீட்டுகளுடன், மக்காசோளம் விதைகள் 500 கிராம் அனுப்பி விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம்.

இத்தகவலை பெரம்பலூர் விதை பரிசோதனை நிலையத்தின் வேளாண்மை அலுவலர்கள் ஆஷா லதா மற்றும் அம்பிகா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.




# 33வது நிறுவன நாள் மற்றும் உழவர் தின விழாவில் சூப்பர் எல் நினோவின் தாக்கங்களைக் குறைப்பதற்கான உத்திகள்




திருச்சி, ஆக.22

ICAR தேசிய வாழை ஆராய்ச்சி மையம் (ICAR–NRCB), தனது 33வது நிறுவன நாள் மற்றும் உழவர் தின விழாவில் 2026 ஆகஸ்ட் 21 அன்று, சூப்பர் எல் நினைவினால் விவசாயத்தில் ஏற்படும் சவால்கள் மேலாண்மை என்ற கருப்பொருளின் கீழ் கொண்டாடியது. இந்நிகழ்ச்சியில் சுமார் 1000த்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

தனது தலைமை உரையில், ICAR–NRCB–யின் இயக்குநர் முனைவர் இரா.செல்வராஜன், காவேரி தங்கம் மற்றும் காவேரி நாடான் ஆகிய இரண்டு புதிய வாழை இரகங்கள் வெளியிடப் பட்டதை எடுத்துரைத்தார். காவேரி தங்கம் ஒரு தனித்துவமான நறுமணம் கொண்ட ரகம், அதிக நுகர்வோர் ஏற்புத்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஒரு உயர்தர இரகமாகும். இதன் மஞ்சள் நிற சதைப்பகுதியில் புரோவைட்டமின் ஏ நிறைந்துள்ளது, இது வழக்கமான இரகங்களை விட கிட்டத்தட்ட 10 மடங்கு அதிகமாகும். பச்ச நாடான் வகையைச் சேர்ந்த காவேரி நாடான், சுமார் 100% அதிக மகசூல் தரும் ஒரு உயர்தர ரகமாகும். இந்த இரண்டு இரகங்களின் விதைச் செடிகளும் நாடு முழுவதும், முக்கியமாக தமிழ்நாடு மற்றும் பிற முக்கிய வாழை விளையும் மாநிலங்களில் உள்ள பல விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், 33 புதிய வாழை மரபணு சேகரிப்புகள் மற்றும் ஐந்து மூசா இனங்களின் சேகரிப்பு என மற்ற முக்கிய சாதனைகளையும் அவர் எடுத்துரைத்தார். மத்தியப் பிரதேசத்தின் புர்ஹான்பூரில் 17 இடங்களிலும், மகாராஷ்டிராவின் ஜல்காவ்ன், தசனூரில் நான்கு இடங்களிலும் ஒருங்கிணைந்த வாடல் நோய் மேலாண்மை செயல் படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் எடுத்துரைத்தார். வாழைப்பழ ஏற்றுமதி குறித்துப் பேசிய அவர், ரஷ்யாவிற்கு வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வதற்காக ஜல்காவ்னில் உள்ள வசதிகளை என்.ஆர்.சி.பி குழு ஒன்று ஆய்வு செய்ததாகக் குறிப்பிட்டார்.

கொச்சி துறைமுகம் வழியாக தமிழ்நாட்டிலிருந்து ரஷ்யாவிற்கு வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளும்

ஆராயப்படும். இயந்திரமயமாக்கலில் ஒரு முக்கிய முன்னேற்ற மாக, கரும்புச் சாறு பிழியும் இயந்திரத்தைப் போலவே, வாழையிலும் தண்டு சாறு பிழியும் இயந்திரம் உருவாக்கப் பட்டுள்ளது. இந்தத் தொழில்நுட்பம், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் சிறு, குறு வியாபாரிகள் தொழில்முனைவு வாய்ப்புகளை உருவாக்கக்கூடும்.

சிறப்பு விருந்தினர் உரையில், கேரளாவின் காசர்கோட்டில் உள்ள மத்திய தோட்டக்கலை நிறுவன இயக்குநர் முனைவர் கே.பாலச்சந்திர ஹெப்பார், மண், பயிர் மற்றும் தட்பவெப்பத்தின் தாவரங்கள் மற்றும் வளிமண்டலம் ஆகியவையே வேளாண் மையின் மூன்று முக்கியக் கூறுகள் என்று வலியுறுத்தினார். காலநிலைகளுக்கு விவசாயிகள் எதுவும் செய்ய முடியாவிட்டாலும் குறைந்த அளவே அவர்களால் மண் ஆரோக்கியத்தையும், பொருத்தமான பயிர் மற்றும் நடவுப் பொருட்களைத் தேர்ந் தெடுப்பதையும் நிர்வகிக்க முடியும். பொருத்தமான பயிர்களையும் நடவுப் பொருட்களையும் தேர்ந்தெடுப்பது, உற்பத்தி அபாயங் களைக் குறைக்க உதவும் என்று அவர் வலியுறுத்தினார். மேலும், பல்லாண்டுப் பயிர்களில் ஒற்றைப் பயிர் முறைக்குப் பதிலாக ஊடுபயிர் முறையைப் பரிந்துரைத்தார். ஏனெனில், இது வயல்வெளியில் ஒரு சாதகமான காலநிலையை உருவாக்கி, எல் நினோவின் பாதகமான விளைவுகளைத் தணிக்க உதவும்.

ஸ்ரீ இ.அறவாழி, இயக்குநர், தென்னை வளர்ச்சி வாரியம், கோவை, முனைவர். ஜி.ஜே. ஜானவி, முதல்வர், HC&RI (பெண்கள்), TNAU, திருச்சிராப்பள்ளி; மற்றும் முனைவர். கே. அண்ணாதுரை, முதல்வர், ADAC&RI, TNAU, திருச்சிராப்பள்ளி, மற்றும் முனைவர் எம்.கோவிந்தராஜு, இயக்குநர், காலநிலை மாற்ற ஆராய்ச்சி மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி அனைவரும் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். அவர்கள் குறிப்பிட்டதாவது: சூப்பர் எல் நினோ என்பது பசிபிக் பெருங்கடல் நிலைகளில் ஏற்படும் மாற்றங்களுடன் தொடர்புடைய ஒரு இயற்கை யான காலநிலை நிகழ்வாகும், மேலும் இது வெள்ளம் மற்றும் வறட்சி ஆகிய இரண்டையும் ஏற்படுத்தக்கூடும். சமீபத்திய ஆண்டு களில் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் தென்மேற்குப் பருவமழை பற்றாக்குறையாக இருந்து வருவதாகவும், இதுபோன்ற காலநிலை மாறுபாடுகள் அடிக்கடி, சில சமயங்களில் 2–3 வருட இடைவெளிக்கு உள்ளேயே ஏற்படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்கவும், காலநிலை மாறுபாட்டின் தாக்கத்தைக் குறைக்கவும், மூடாக்கு இடுதல் மற்றும் சொட்டு நீர் பாசன தொழில் நுட்பங்களை பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர்கள் விவசாயிகளுக்கு அறிவுறுத்தினர்.

வாழையில் சாதனை புரிந்தவர்கள் அங்கீகரிக்கும் வகையில், சிறந்த வாழை விவசாயி, சிறந்த வாழைப் மரபணு சேகரிப்பவர், சிறந்த பெண் தொழில்முனைவோர், சிறந்த வேளாண் அறிவியல் மையம், சிறந்த தொழில் முனைவோர், சிறந்த வாழை ஏற்றுமதி யாளர் மற்றும் சிறந்த திசு வளர்ப்பு உற்பத்திப் பிரிவு போன்ற விருதுகள் உட்பட 16 விருதுகள் வழங்கப்பட்டன. பழங்குடியினர் சமூகங்களின் நலனுக்காக ஆற்றிய பங்களிப்பிற்காக, தமிழ்நாடு பழங்குடியினர் நலத்துறை இயக்குநரகத்தின் இயக்குநர் எஸ்.அண்ணாதுரைக்கு பாராட்டு விருதும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், சூப்பர் எல் நினோ நெல், வாழை, கரும்பு மற்றும் தென்னை சாகுபடியில் உள்ள சவால்கள் மற்றும் தணிப்பு உத்திகள் மற்றும் வாழை சாகுபடியில் வாடல் நோய் மேலாண்மை ஆகிய தலைப்புகளில் குழு விவாதங்கள் இடம் பெற்றன. இதில் விவசாயிகள், தொழில்முனைவோர் மற்றும் பிற பங்குதாரர்கள் பங்கேற்றனர். 39க்கும் மேற்பட்ட கண்காட்சி அரங்குகளும் இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக இருந்தன. ICAR–NRCB-யின் முதன்மை விஞ்ஞானி முனைவர் வ.குமார் வரவேற்புரை வழங்கினார், முதன்மை விஞ்ஞானி முனைவர் சி.கற்பகம் நன்றியுரை வழங்கினார்.

# வேளாண் அறிவியலாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி




கோயம்புத்தூர், ஆக.22 வேளாண் அறிவியலாளர்களின் ஆராய்ச்சி மேன்மை, புதுமையான கற்பித்தல் நடைமுறைகள் மற்றும் கல்வித் தலைமைத்துவத் திறன்களை மேம்படுத்துவதில் தொடர்ச்சியான தொழில்முறை வளர்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் உள்தர உறுதிப்படுத்தல் பிரிவு (IQAC) சார்பாக திறன் மேம்பாட்டுப் பயிற்சி 19.8.26 முதல் 21.8.26 வரை மூன்று நாள் நடத்தப்பட்டது.

இப்பயிற்சி, வேளாண் அறிவியலாளர்களின் தொழில்முறை திறன்களை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நிபுணர் அமர்வுகளுடன் பயனுள்ளதாக அமைந்தது. உயர்மதிப்புள்ள ஆராய்ச்சி முன்மொழிவுகளை உருவாக்குதல், இந்திய உயர்கல்வி முறையைப் புரிந்துகொள்ளுதல், கல்விசார் மேன்மைக்கான தர உறுதி நடைமுறைகள், இணையப் பாதுகாப்பு மற்றும் தரவு தனியுரிமை, மேலும் உயர்தர (Q1) அறிவியல் இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுவதற்கான உத்திகள் குறித்து விரிவான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மேலும், மெய்நிகர் உண்மை (Virtual Reality - VR), மேம்படுத்தப் பட்ட மெய்நிகர் உண்மை (Augmented Reality - AR), செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த கற்பித்தல் முறைகள், கல்வி செயலிகள், விளையாட்டு அடிப்படையிலான கற்றல் மற்றும் வேளாண் விரிவாக்கத்தில் நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்து பங்கேற்பாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. தொழில்நுட்ப தாக்க மதிப்பீடு, உணர்வுசார் நுண்ணறிவு மற்றும் பயனுள்ள கற்பித்தல் நடைமுறைகள் தொடர்பான அமர்வுகள், மாறிவரும் கல்வி மற்றும் ஆராய்ச்சிச் சூழலுக்கு ஏற்ப பேராசிரியர்களின் முழுமையான திறன் மேம்பாட்டின் அவசியத்தை எடுத்துரைத்தன.

இப்பயிற்சி அமர்வுகள், நேரடி செய்முறைப் பயிற்சிகள், எழுத்துப் பூர்வ செயல்பாடுகள் மற்றும் கணினி வழிப் பயிற்சி தொகுதிகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் மிகவும் பயனுள்ளதாகவும், பங்கேற்பாளர்களை ஈடுபடுத்தும் வகையிலும் அமைந்தன. இத்தகைய செயல்முறை அணுகுமுறைகள் மூலம் பங்கேற் பாளர்கள் கருத்துகளை ஆழமாகப் புரிந்துகொள்வதுடன், பயிற்சியில் பெற்ற அறிவு மற்றும் திறன்களை தங்களது கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் திறம்பட செயல்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர் பெ.ராஜ்குமார் மற்றும் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர் கா.வெங்கடேசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குநர் முனைவர் பி.ஜெயக்குமார் வாழ்த்துரை வழங்கினார். இணைப்பேராசிரியர் (தோட்டக்கலை) முனைவர் பெ.சா.கவிதா வரவேற்புரையாற்றினார். திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் IQAC ஒருங்கிணைப்பாளர் மற்றும் பேராசிரியர் (வனவியல்) முனைவர் சு.உமேஷ்கண்ணா நன்றியுரை வழங்கினார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பார்த்தீனியம் மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு முகாம்




கோயம்புத்தூர், ஆக.22

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உழவியல் துறை மற்றும் 'களை மேலாண்மைக்கான அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டம்' ஆகியவற்றின் சார்பில், ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 16 முதல் 22 வரை 'பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம்' கடைபிடிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு ஜபல்பூரில் உள்ள ஐசிஏஆர் –களை ஆராய்ச்சி இயக்குநரகம் நிதியுதவி அளிக்கிறது. இதற்கிணங்க, விவசாயிகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், பண்ணை மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் போன்ற பல்வேறு தரப்பினரிடையே பார்த்தீனியத்தின் தீய விளைவுகள் மற்றும் அதன் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

இதன் ஒரு பகுதியாக, கோயம்புத்தூர் மாவட்டம் பெரிய நாயக்கன்பாளையத்தில் உள்ள ஜி.கே.டி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், ஆகஸ்ட் 21, 2026 அன்று பள்ளி மாணவர் களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப் பட்டது. இந்நிகழ்ச்சியில், ஜபல்பூர் ஐசிஏஆர் – களை ஆராய்ச்சி இயக்குநரகத்தின் 'களை மேலாண்மைக்கான அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின்' முதன்மை விஞ்ஞானியும் பொறுப்பாளருமான முனைவர் வி.கே.சௌத்ரி கலந்து கொண்டு, பார்த்தீனியம், அதன் பரவல், மனித மற்றும் விலங்கு ஆரோக்கியத்திற்கு ஏற்படும் தீங்குகள் மற்றும் ஒருங் கிணைந்த பார்த்தீனியம் மேலாண்மை முறைகள் குறித்து சிறப்புரை ஆற்றினார். மேலும், உழவியல் துறையின் பேரா சிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆர்.கிருஷ்ணன், பார்த் தீனியம் களையின் உயிரியல் மற்றும் சூழலியல் பண்புகள், அதன் பரவல், சாகுபடி முறை, வேதியியல் மற்றும் உயிரியல் முறைகள் போன்ற கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் இந்த

தாவரத்தை சத்துக்கள் நிறைந்த இயற்கை உரமாக மாற்றுவதற்கான பயனுள்ள வழிகள் குறித்து முக்கிய உரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், மாணவர்களுக்குப் பார்த்தீனியத்தின் தீய விளைவுகள் மற்றும் மேலாண்மை குறித்த கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டு, அவர்கள் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் மூலம் ஊக்குவிக்கப்பட்டனர். கூடுதலாக, ஒரு கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பார்த்தீனியம் தாவரங்களின் நேரடி மாதிரிகள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணியான 'ஜைகோகிராம்மா பைக்கோலராட்டா' என்ற மெக்சிகன் வண்டு ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டன.

இத்திட்டத்தில் பணியாற்றும் பேராசிரியர் (உழவியல் துறை) மற்றும் முதன்மை ஆய்வாளர் முனைவர் எஸ்.ராதாமணி, இணைப் பேராசிரியர் (மண் அறிவியல்) முனைவர் ஏ.ரேணுகா தேவி, உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் மூத்த ஆராய்ச்சி ஆய்வாளர்கள் ஆகியோர் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தினர். ஜி.கே.டி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் இந்திரா ரமேஷ் மற்றும் ஆசிரியர்கள் இந்நிகழ்ச்சியை நடத்துவதில் பங்கேற்றனர். மாணவர்கள் இதில் ஆர்வத்துடன் பங்கேற்று, மிகவும் ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள அயல்நாட்டுக் களைத் தாவரமான 'பார்த்தீனியம் ஹிஸ்டெரோஃபோரஸ்' நிர்வகிப்பது குறித்து சமூகத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளக்கப்படங்கள், ஓவியங்கள், வரைபடங்கள் மற்றும் மாதிரிகளை காட்சிப்படுத்தினர்.



# வறட்சியை வெல்ல களமிறங்கும் விவசாயிகள்

## வம்பன்–11 உளுந்து விதை வழங்கலுடன் மாற்றுச் சாகுபடி பயிற்சி தொடக்கம்!

இராமநாதபுரம், ஆக.22

இராமநாதபுரம் மாவட்டத்தை வறட்சி மாவட்டம் என்ற பிம்பத்தி லிருந்து மாற்றி, கிடைக்கும் நீரையும் மழையையும் திறம்பட நிர்வகித்து சாதனை படைக்கும் வகையில், வேளாண்மைப்







பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் ஒரு சிறப்பான முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டு உள்ளது. காலநிலை மாற்றத்தின் சவால்களைச் சமாளிக்கும் விதமாக, உளுந்து சாகுபடியை விவசாயிகளிடம் பரவலாக்கும் நோக்கில் உற்பத்தி திறன் மேம்பாட்டுப் பயிற்சி அண்மையில் கோலாகலமாகத் துவக்கி வைக்கப்பட்டது.

**மாற்றுச் சாகுபடி மூலம் உழவர்களின் வருமானத்தைப் பெருக்குதல்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் விரிவாக்க கல்வி இயக்குநர் முனைவர் பி.பொ.முருகன், ராமநாதபுரத்தில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்திற்கு வருகை தந்து, இப்பயிற்சித் திட்டத்தைத் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு, வம்பன்-11 உயர் ரக உளுந்து விதைகள் மற்றும் அவற்றுக்கான அவசியமான இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

விழாவில் இயக்குநர் முனைவர் பெ.பொ.முருகன் சிறப்புரை யாற்றுகையில் தெரிவித்ததாவது, 'ராமநாதபுரம் மாவட்டம் வறட்சி மாவட்டம் என அறியப்பட்டாலும், இயற்கையாக கிடைக்கும் நீரையும் மழையையும் மிகச் சரியாகப் பயன்படுத்தி விவசாயத்தில் முத்திரை பதிக்கும் முன்மாதிரி மாவட்டமாகத் திகழ்கிறது.

மேலும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு பின்வரும் முக்கிய தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை அவர் வழங்கினார்:

**குறுகிய கால பயிர்கள் :** சூப்பர் எல்-நினோ (Super El Nino) விளைவுகளைக் கருத்தில் கொண்டு, விவசாயிகள் காலத்திற்கேற்ற குறுகிய கால பயிர் ரகங்களை உடனடியாகத் தேர்ந்தெடுத்துப் பயிரிட வேண்டும்.

**விதைநேர்த்தி :** நோய்த் தாக்குதலைத் தவிர்த்து, நல்ல லாபம் பெற விதைநேர்த்தி செய்து விதைக்கும் முறையைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

**வறட்சியைத் தாங்கும் நெல் :** வறட்சியினைத் தாங்கி வளரக்கூடிய உயர் ரக நெல் விதைகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தி அதிகப்படியான மகசூலைப் பெறலாம்.

**நவீன பாசன முறைகள் :** நீர் மேலாண்மையை உறுதி செய்ய சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன உத்திகளைத் தீவிரமாகப் பயன்படுத்த வேண்டும்.

**காலநிலைச் செய்திகள் :** வேளாண் அறிவியல் நிலையம் மூலமாக நாள்தோறும் காலநிலை சார்ந்த உடனுக்குடன் தகவல் களைப் பெற்றுப் பயன்பெற வேண்டும்.

**கிசான் சாரதி செயலி :** நவீன தொழில்நுட்பங்களை உழவர்கள் எளிதில் அறிய கிசான் சாரதி செயலியில் தங்களை இணைத்துக் கொள்ள ஊக்குவிக்க வேண்டும்.

இந்நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு உளுந்து விதைகள் வழங்கப்பட்டதோடு, மிளகாயினைத் தரமாக உலர்த்தி மதிப்புக் கூட்டச் செய்யும் வகையில் நவீன சூரிய மின் உலர்த்திகளும் (Solar Dryers) வழங்கப்பட்டன.

**வேளாண் அறிவியல் நிலையத்தின் ஆக்கப்பூர்வமான பங்களிப்பு**

நிகழ்வின் தொடக்கமாக, வேளாண் அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் கி.இராமகிருஷ்ணன் வரவேற்புரை யாற்றி, எல்-நினோ நிகழ்வால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதனை எதிர்கொள்ளும் முறைகள் குறித்தும், நிலையத்தின் செயல்பாடுகள் குறித்தும் விளக்கமாகப் பேசினார்.

போகலூர் ஒன்றியம் முத்துசெல்லாபுரம், திருப்புல்லாணி ஒன்றியம் கொம்பூதி மற்றும் பொக்கரநேந்தல் கிராமங்களைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட உழவர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். வேளாண் அறிவியல் நிலையத்தின் அனைத்து தொழில்நுட்ப வல்லுநர்களும் விவசாயிகளுக்குத் தேவையான நேரடித் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்கி அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர்.

வறட்சியை வாய்ப்பாக மாற்றி, நவீன உத்திகளுடன் வேளாண்மையில் புதிய பாய்ச்சலை நிகழ்த்தத் துடிக்கும் ராமநாதபுரம் விவசாயிகளுக்கு இப்பயிற்சி பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# Rithvik Pipe

## 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# அட்மா திட்டத்தின் கீழ் அங்கக சான்றளிப்புத்துறை பற்றிய விவசாயிகள் பயிற்சி




சிவகங்கை, ஆக.22

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரம் உரத்து பட்டி கிராமத்தில் அங்கக சான்றளிப்புத்துறை பற்றிய விவசாயிகள் பயிற்சி நடத்த பட்டது. வேளாண்மை அலுவலர் பயிற்சியில் கலந்து கொண்டு முன்னினை வகித்தார். யோகேஸ்வரன், விதை சான்றுத்துறை அலுவலர், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு விதை பண்ணை அமைக்கும் முறை பற்றியும் விளைவித்த பயிர்களுக்கு சான்றளிக்கும் முறை பற்றியும் தேவைபடும் ஆவணங்கள் பற்றியும் மற்றும் பதிவு முறைகள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். விதைகளை அலுவலகத்தில் வாங்கி அதை விளைவிக்கும் முன்பு முளைப்புதிறன் உள்ளதா என பரிசோதனை செய்ய வேண்டும். அதன் பிறகு விதைகளை விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும், விதை நேர்த்தி செய்து விதைப்பதால் பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்கம் குறைவாக இருக்கும் மற்றும் வரப்பு பயிராக பயறு வகை பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம் இரட்டிப்பு வருமானம் கிடைக்கும் என்ற தொழில்நுட்பம் பற்றி விரிவாக எடுத்து கூறினார்.

வேளாண்மை அலுவலர் ப.கார்த்திகா, பயிற்சியில் கலந்து கொணட விவசாயிகளுக்கு பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்கள் இடுவதன் மூலம் சுற்றுசூழல் பாதிக்கபடாத வகையில் தழைசத்து மண்ணில் அதிகரிக்கலாம். அதன் மூலம் யூரியா மற்றும் அம்மோனியா சல்பேட் போன்ற தழைசத்து உரங்களின் பயன் பாட்டினை வெகுவாக குறைக்கலாம் என்பன போன்ற தொழில் நுட்பங்களை விரிவாக எடுத்து கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் அலுவலகத்தில் நடை முறையில் உள்ள திட்டங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். திட்டங்கள் வாங்கி பயனடைய தேவை படும் ஆவணங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார் மற்றும் பயிர் கணக்கெடுப்பு முறைமற்றும் விவசாய அடையாள அட்டை பதிவு செய்யும் முறை பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

உதவி விதை அலுவலர் வடிவேலு, பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு விதைபண்ணை அமைக்கும் முறை பற்றியும் விதை பண்ணை அமைக்க தேவைபடும் ஆவணங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். விதை பண்ணை அமைப்பதன் மூலம் விவசாயிகளுக்கு தானியங்களை நல்ல விலைக்கு விற்று தருவதன் மூலம் நல்ல மகசூல் கிடைக்கும் என்ற தொழில்நுட்பம் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் பெ.ஸ்ரீரங்கசெல்வி, பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் பயன் படுத்துவதால் மண்ணில் உள்ள தலை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை பயிர்கள் எளிதாக எடுத்து கொள்ளும் வகையில் மாற்றி தரப்படுகிறது. மேலும் பயிர் வளர்ச்சியினை நிலைகளுக்கு ஏற்ப அடி உரம் தூர்கட்டும் பருவம் பூக்கும் பருவம் என பிரித்து உரங்களை இடுவதால் சத்துக்கள் வீணாவது என்பது வெகுவாக குறைக்கபட்டு விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது என விவசாயிகளுக்கு விரிவாக எடுத்து கூறினார்.

மேலும் இப்பயிற்சியில் மண் மாதிரி சேகரித்தல் உயிர் உரங்கள் நெல் நுண்ணூட்டம் பாரம்பரிய நெல் இரகங்களின் விதைகள் இலைவண்ண அட்டை போன்ற பொருட்கள் கண்காட்சியாக விவசாயிகள் பார்வைக்கு வைக்கபட்டிருந்தது. உதவி தொழில்நுட்ப மேலாளர் ம.விஜய்ஆனந்த் பயிற்சிக்கு உண்டான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தார் மற்றும் பயிற்சியின் முடிவில் விவசாயி களுக்கு நன்றியினை தெரிவித்தார்.




# வேளாண் கண்காட்சியில் இப்கோ விழிப்புணர்வு முகாம்

திருச்சி, ஆக.22

திருச்சிராப்பள்ளியில் உள்ள தேசிய வாழை ஆராய்ச்சி மையம் (NRCB) சார்பில் கிசான் மேளா வேளாண் கண்காட்சி நடைபெற்றது.




இந்நிகழ்ச்சியை டாக்டர் பாலச்சந்திர ஹெப்பார், இயக்குநர், ICAR-CPCRI, காசர்கோடு, கேரளா, தொடங்கி வைத்தார். மேலும் டாக்டர் கே.அண்ணாதுரை, முதல்வர், ADAC & RI, திருச்சிராப் பள்ளி, டாக்டர் ஜி.ஜனவி, HC & RI மகளிர், திருச்சிராப்பள்ளி, ஈ.அரசழி, இயக்குநர், தென்னை வளர்ச்சி வாரியம், கோயம் புத்தூர், டாக்டர் ஆர்.செல்வராஜன், இயக்குநர், NRCB, திருச்சி மற்றும் பல்வேறு முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 700 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி பொம்மண்ணன் என்பவரால் இப்கோவின் நானோ திரவ உரங்களான நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி., நானோ காப்பர், நானோ ஜிங்க், சாகரிகா திரவ உரங்கள், சொட்டு நீர் உரப்பாசன உரங்கள் மற்றும் இப்கோ உயிர் உரங்களின் தயாரிப்புகள் காட்சிப்படுத்தப் பட்டன. இதில் இப்கோ நானோ திரவ உரங்களின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் குறித்து விளக்கப்பட்டது.

மேலும், இப்கோ உரங்களை வாங்குவதன் மூலம் கிடைக்கும் சங்கட் ஹரண் பீமா காப்பீட்டுத் திட்டத்தின் பயன்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

அதோடு, குறைந்த செலவில் தெளிப்பு சேவையை முன்பதிவு செய்வதற்காக இப்கோ கிசான் செயலியை விவசாயிகள் பதிவிறக்கம் செய்து பயன்படுத்துவதன் முக்கியத்துவமும் விளக்கப்பட்டது.

# பார்த்தீனியம் விழிப்புணர்வு முகாம் மற்றும் பேரணி




திருச்சி, ஆக.22

திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் ஆகஸ்ட் 16 முதல் 22 வரை பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு, சிறுகமணி சேவை சாந்தி மெட்ரிக்குலேசன் பள்ளியில் மாணவர்களுக்கு பார்த்தீனியம் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சியை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி, துவக்கி வைத்து பார்த்தீனியம் களையை கண்டறிதல் மற்றும் பார்த்தீனியத்தால் ஏற்படும் தீமைகள் குறித்து விளக்கம் அளித்தார். இணைப்பேராசிரியர் முனைவர் செ.ராதிகா, பார்த் தீனியம் பரவலை தடுக்க மேற்கொள்ள வேண்டிய முன்னெச் சரிக்கை மற்றும் கட்டுப்பாட்டு வழிமுறைகள் குறித்து விரிவாக துறைக்கு செயல் விளக்கம் அளித்தார். மேலும் அவர்கள் பேசுகையில், பார்த்தீனியம் மிகவும் வேகமாக விதை மூலம் பரவும் ஆக்கிரமிப்பு களையாகும். இது வேளாண்மையில் பயிர்களின் வளர்ச்சியையும் மகசூலையும் பாதிப்பதுடன், மனிதர்களுக்கு தோல் அரிப்பு, ஒவ்வாமை, ஆஸ்துமா, சுவாசக் கோளாறுகள் போன்ற உடல்நலப் பிரச்சினைகளையும் ஏற்படுத்துகிறது. மேலும், கால் நடைகளின் மேய்ச்சல் நிலங்களை பாதித்து சுற்றுச்சூழல் சமநிலை யையும் சீர்குலைக்கிறது. பார்த்தீனியத்தை கட்டுப்படுத்த பூக்கும் முன்பே செடிகளை வேரோடு பிடுங்கி அகற்ற வேண்டும். அகற்றும் போது கையுறை, முகக்கவசம் மற்றும் காலணிகளை பயன்படுத்து வது அவசியம். அகற்றிய செடிகளை பாதுகாப்பான முறையில் குழியில் புதைக்கவோ அல்லது உரிய முறையில் அழிக்கவோ வேண்டும். அல்லது உரிய முறையில் மக்க வைத்து உரமாக பயன் படுத்தலாம். பயிர் இல்லாத இடங்களில் பரிந்துரைக்கப்பட்ட களைக் கொல்லிகளை தேவைக்கேற்ப பயன்படுத்தலாம். மேலும், மெக் சிகன் வண்டு என்ற உயிரியல் கட்டுப்பாட்டு பார்த்தீனியத்தின் வளர்ச்சியை இயற்கையாகக் கட்டுப்படுத்த உதவுகிறது என விளக்க மளித்தனர். பார்த்தீனியம் விழிப்புணர்வு குறித்த கண்காட்சி அமைக் கப்பட்டது. மேலும் சாந்தி மெட்ரிக் பள்ளியின் முதன்மையர் சித்ரா பார்த்தீனியம் விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைக்க, 90 மாணவர்கள் பாதகைகளுடன் கலந்து கொண்டனர்.